**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 18.09.2025**
**OS. No. 66/2023**
**வழக்கு சாட்சி PW.1– ரமேஷ் , த/பெ.மாரிசெட்டி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி :**

1.எங்கள் பாட்டி மல்லக்காள் எங்களுக்கு எழுதி கொடுத்த 27.06.1998 தேதியிட்ட உயில் ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. எங்கள் பாட்டி மல்லக்காளின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. தாவா சொத்திற்குண்டான கூட்டுபட்டா எண்.2617 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 10.09.1998 ம் தேதியில் மேட்டூர் தாசில்தார் அவர்கள் பிறப்பித்த பட்டா மாறுதல் உத்தரவு அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. என் பாட்டி மல்லக்காள் பெயரிலுள்ள கூட்டுபட்டா எண்.554 அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. மேச்சேரி காவல் நிலையத்தில் நாங்கள் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட மனு ரசீது எண்.112/2023 அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. தாவா சொத்தின் புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.

(மேற்கண்ட ஆவணங்களில் வா.சா.ஆ.6 மனு ரசீதுடன் புகார் நகல் தாக்கல் செய்யவில்லை என்றும், வா.சா.ஆ.7 ஆவணத்துடன் புகைப்படங்களின் ரசீது தாக்கல் செய்யவில்லை என்றும் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்ததன் பேரில் அவர்களது ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது).

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு 28.10.2025 ம் தேதி ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.